# ஒரு குடும்பச் சித்திரம் [20:6-12]

பவுல் தமது மூன்றாவது ஊழியப் பயணத்தின் முடிவில் எருசலேமுக்குச் செல்லும் வழியில் துரோவாவில் தம்முடைய பயணத் துணைவர்களுடன் சற்றுத் தாமதித்தார். இந்தப் பார்வையிடுதல் பற்றி லூக்கா பின்வரும் வார்த்தைகளைக் கூறினார்.

> *புளிப்பில்லாத அப்பப் பண்டிகை நாட்களுக்குப் பின்பு, நாங்கள் கப்பல் ஏறிப் பிலிப்பி பட்டணத்தை விட்டு, ... துரோவா பட்டணத்துக்கு.... வந்து, அங்கே ஏழு நாள் தங்கியிருந்தோம்.*
>
> *வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி, சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து ராத்திரி மட்டும் பிரசங்கித்தான். அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது. அப்பொழுது ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப் போய், அவன் மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப் புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான். அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக் கொண்டு வந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள் (அப். 20:6-12).*

பவுலின் பயணத்தில் சில பகுதிகளில் லூக்கா விரைவில்

*கடந்து செல்லும் அதே வேளையில், மற்ற பகுதிகளில் அவர் சிறு விபரங்களைக் கூடக் கொடுப்பதற்கென்று தாமதித்தார். நமது முந்திய பாடத்தில், மாதக் கணக்கில் நடந்த செயல்பாடுகள் மற்றும் சாதனைகளை லூக்கா விரைவில் கொடுத்து முடித்தார். இந்த வசனப் பகுதியில், சபையில்[1] தூங்கி விழுந்த ஒரு இளைஞனைப் பற்றிய உண்மைகளை லூக்கா முறைப்படி கொடுத்தார்!*

*நடபடிகளில் ஏன் இந்த வரலாறு உள்ளது?[2] இது, "பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கையில் மிகுந்த தூக்கமடைந்த'' (வ. 9) வாலிபனைச் சங்கடப்படுத்துவற்காகவா? நிச்சயம் அதற்காக இல்லை. துரோவாவில் இருந்த சபையானது கூடிவருகையில் இருந்த வசீகரமான அம்சங்களை இவ்வசனப் பகுதியானது சித்திரம் தீட்டுகின்றதென்பதே எனது கருத்தாகும். ஆதி சபையின் குடும்ப சூழல் பற்றி விசேஷமாக எனது மனதில் ஆழப்பதியும் கருத்துக்கள் இதில் உள்ளன.*

## *குடும்பம் ஒன்றாகக் கூடியது (20:6, 7)*

*பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமில் இருக்க வேண்டும் (வ. 16) என்று பவுல் தீவிரப்பட்டாலும் கூட, அவரும் அவருடைய நண்பர்களும் துரோவாவில் ''ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள்'' (வ. 6). "இது கப்பல் புறப்படுதலின் கால அட்டவணையின் காரணமாக நடந்திருக்கலாம், ஆனால், விசுவாசிகளைச் சந்திக்கவும், வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கவுமே அங்கு தாமதித்தனர் என்பதே மிகவும் ஏற்புடையதாய் இருக்கின்றது" (21:4; 28:14). பிலிப்பியிலிருந்து துரோவாவுக்கு வருவதற்கு வழக்கத்தைக் காட்டிலும் அதிக நாட்களாகி விட்டதால், திங்கள்கிழமையன்று அங்கு வந்து சேர்ந்த பவுல், துரோவாவில் கர்த்தருடைய நாளில் கூடி வருதலைத் தவற விட்டு விட்டார்.[3] ஆகையால், தமது சகோதரர்கள் மறுபடியும் அங்கு கூடி வரும்போது அவர்களுடன் இருப்பதற்காக அவர் ஒரு முழு வாரம் அங்கு காத்திருந்தார்.[4]*

*சபை ஆராதனையில் கலந்து கொள்ளாதிருப்பதற்குச் சாக்குப் போக்காகப் பவுல், ஊரை விட்டு வெளியே சென்றிருந்தது" மற்றும் "தமது இல்லத்துச் சபையில் இராதது" போன்ற*

வற்றைப் பயன்படுத்தவில்லை என்பதைக் கவனியுங்கள். அவர் புதிய நகரம் ஒன்றுக்கு வந்த பொழுது, அங்கு தமது சகோதரர் களைத் தேடி, அவர்களுடன் ஆராதனைக்குக் கூடி வந்தார். வாரத்தின் முதல் நாளில் அவர்கள் கூடிவந்த போது, அவர் தமது சகோதரர்களுடன் இருக்க விரும்பினார்.

இயேசு வாரத்தின் முதல் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்து, தமது சீஷர்களுக்குத் தோன்றியதால் (லூக். 24:1, 7, 13, 21; யோவா. 20:19, 26) ஆதி சபையார் வாரத்தின் முதல் நாளில் கூடி வந்தார்கள்.[5] ஜஸ்டின் மார்ட்டியர் அவர்கள் பின்னாளில், ‘‘ஞாயிற்றுக் கிழமையை நாங்கள் எங்கள் பொதுவான கூடிவருதலின் நாளாகக் கொண்டிருக்கின்றோம், ஏனென் றால்.... அந்த நாளில்தான் நமது மீட்பராகிய இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார்’’[6] என்று எழுதினார். உலகியல் படைப்பின் நினைவு கூருதலாக, யூதர்கள் ஏழாம் நாளை (கொலோ. 2:14, 16ஐக் காணவும்) ஆசரித்தார்கள் (யாத். 20:8-11); கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த் தெழுதல் ஆகியவற்றின் நினைவு கூருதலாக, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளை ஆசரிக்கின்றார்கள் (1 கொரி. 11:23-25), இது அவர்களை “ஒரு புது சிருஷ்டியாக” ஆக்கிய சாத்தியக் கூறுடையதாகும் (கலா. 6:15).

அவர்கள் கூடிவந்தபோது விளக்குகள் வைக்கப் பட்டிருந் ததாக (வ. 8) லூக்கா குறிப்பிட்டதால், துரோவாவில் இருந்த சபையானது இரவு நேரத்தில் கூடி வந்திருக்கும் என்பது உறுதி யாகும். அந்த சமூகத்தில் ஞாயிறு என்பதுவும் கூட இன்னொரு வேலை நாளாய் இருந்தபடியினாலும், பெரும் பாலான கிறிஸ்தவர்கள் மற்றவர்களிடத்தில் வேலை செய்து கொண்டிருந்ததாலும்,[7] நாளின் வேலைகள் யாவும் முடிந்த பிறகுதான் ஆராதிக்கக் கூடிவர முடிந்தது.

யூதக் கணக்கீட்டு முறையை லூக்கா பயன்படுத்தியதாக வும், நாம் சனிக்கிழமை இரவு என்று நினைக்கும் நேரத்தில் தான் அந்த சபை கூடி வந்தது என்பதாகவும் சிலர் நினைக்கின் றார்கள், ஆனால் “கிரேக்கர்களின் நகரத்தில் நடந்தவைகளைப் பற்றி அறிக்கை தருவதற்கு லூக்கா யூதர்களின் முறையை [பயன்படுத்தியதற்கான] சுட்டிக் காட்டுதல்கள் எதுவும் இல்லை.” யூதர்களின் முறைமையையோ அல்லது ரோமர்களின்

*முறைமையையோ, இவைகளில் லூக்கா எதைப் பயன்படுத்தியிருந்தாலும், துரோவாவில் இருந்த சபையானது வாரத்தின் முதல் நாள் இரவு வேளையில் கூடி வந்திருந்தது.*[8]

*பின்வரும் உண்மைகளைச் சேர்த்துப் பாருங்கள்: (1) பவுல் தமது சகோதரர்களைச் சந்திப்பதற்காகத் தமது வழியில் இருந்து புறம்பே சென்றார்; (2) சகோதரர்கள் வசதியற்றதாயிருந்த நேரத்தில் கூடி வந்திருந்தார்கள் (3) அவர்கள் ஒரு நாளின் கடுமையான வேலைக்குப் பிறகு கூடி வந்திருந்தார்கள். கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் சந்திக்க விரும்பினார்கள் என்று நாம் முடிவு செய்கின்றோம் (அப். 2:42). உடல் சம்பந்தமான குடும்பங்கள் ஒன்றுகூடுவதில் மகிழ்ச்சியடைகின்றன; உண்மையில், குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக இருப்பதை மகிழ்ச்சியுடன் அனுபவிக்காதிருந்தால் அந்தக் குடும்பம் செயலற்றது என்று நாம் அழைக்கின்றோம். அது போலவே, தேவனுடைய குடும்பத்தில் இருப்பவர்களும் ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் இருப்பதை மகிழ்ச்சியுடன் அநுபவிக்கின்றார்கள்.*

*சுய பரிசோதனை இவ்விடத்தின் ஒழுங்கு முறையாக இருக்கலாம். கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதர சகோதரிகளுடன் இருப்பதை நீங்கள் மகிழ்ச்சியுடன் அநுபவிக்கின்றீர்களா? தேவனுடைய குடும்பத்தில் ஒன்றுகூடுவதை நீங்கள் மகிழ்ச்சியுடன் அநுபவிக்கவில்லையென்றால், உங்கள் சகோதர சகோதரிகளுடனும், உங்கள் பிதாவுடனும் உங்கள் உறவைப் பற்றி நீங்கள் ஆத்தும ஆராய்வு செய்ய விரும்பலாம் (எபி. 10:25).*

## *குடும்பம் கர்த்தருடைய பந்தியை ஒன்றுகூடி உண்டது (20:7)*

*ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் ஆராதிப்பதற்காக சபை கூடிவந்தபொழுது (1 கொரி. 16:2), கர்த்தருடைய பந்தியே அவர்களுடைய ஆராதனையின் மையப் பொருளாய் இருந்தது. வசனம் 7ஐக் கவனியுங்கள்: "அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில்."*[9] *"அப்பம் பிட்குதல்" என்ற சொற்றொடரானது பொதுவான உணவு உண்பதையோ*

*(அப். 2:46) அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதையோ (மத். 26:26; அப். 2:42; 1 கொரி. 10:16) குறிக்கக் கூடும். கல்வியாளர்களில் பெரும்பாலோர், "இவ்விடத்தில் இந்தச் சொற்றொடரானது முறையான கூட்டத்தின் நோக்கமாக வெளிப்படுத்தப்படும் கர்த்தருடைய பந்தியையே குறிப்பிடு கின்றது"[10] என்று ஒப்புக் கொள்ளுகின்றார்கள்.*

*"கர்த்தருடைய பந்தி"(1 கொரி. 11:21)யானது கர்த்தருடைய நாளில் (வெளி. 1:10) உண்ணப்பட்டதை அறியும்போது நாம் வியப்படைவதில்லை. ஆராதனையின் ஒவ்வொரு வெளிப் பாடும் முக்கியமானதாகும், ஆனால் ஆராதனையில் கர்த்தரின் பந்தி என்பது தனிச்சிறப்பான கிறிஸ்தவ வெளிப்பாடாக உள்ளது. படிப்பதற்கும், ஜெபிப்பதற்கும், பாடுவதற்கும் மற்றும் கொடுப்பதற்கும் யூதர்கள் கூடினர்; ஆனால் கிறிஸ்தவர்கள் மட்டுமே வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளிலும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்[11] ஆகியவற்றை நினைவுகூருவதற்காக "கர்த்தருடைய பந்தியை"ச் சுற்றிக் கூடினர் (1 கொரி. 10:21).*

*ஆதிக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்காக வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளிலும் கூடி வந்தார்கள். நாம் மேற்கோள் காட்டியிருக்கின்ற வசனப் பகுதிகளில் இருந்து இதை நாம் முடிவு செய்ய இயலும்: கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி வந்ததாலும் (1 கொரி. 16:1, 2), அவர்கள் கூடி வந்தபோது, அப்பம் பிட்குதல் என்ற நோக்கத்திற்காக அவர்கள் ஒன்றுகூடியதாலும் (அப். 20:7), அவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றார்கள் என்று நாம் முடிவு செய்கின்றோம். இது உண்மைதான் என்று ஆதிக் கிறிஸ்தவ எழுத்தாளர்களின் சாட்சிகளாலும் இது உறுதி செய்யப் பட்டுள்ளது. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் பின்வருமாறு எழுதப்பட்டது: "ஆனால், கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் நீங்கள் ஒன்றுகூடி, அப்பம் பிட்டு நன்றி செலுத்துங்கள்." மறுபடியும் நாம், கி.பி. 150ம் வருடவாக்கில் ஜஸ்டின் மார்ட்டியர் அவர்களால் எழுதப்பட்ட பின்வரும் வார்த்தைகளைப் பார்க்கின்றோம்: (இவை ஆலெனால் மேற்கோள் காட்டப்பட்டது).*

> நகரத்திலிருந்தாலும், கிராமப்புறத்தில் இருந்தாலும் எல்லாக் கிறிஸ்தவர்களும், கர்த்தருடைய நாளில் ஒன்று கூடினார்கள், ஏனென்றால் அது கர்த்தருடைய உயிர்த் தெழுதலின் நாளாகும்... ஜெபம் முடிவடையும்போது, அப்பம் மற்றும் திராட்ச ரசம் மற்றும் தண்ணீர் ஆகியவை கொண்டு வரப்பட்டு, கூட்டத் தலைவர் தமது திறமைகளுக்கேற்ப ஜெபம் செய்து நன்றி செலுத்த, மக்கள் அதை ஆமோதித்து ஆமென் என்று கூறுகின்றார் கள்; நன்றி செலுத்தப்பட்ட அவைகள் மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

"கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் சீஷர்கள் கூடியது எவ்வளவு நிச்சயமானதோ, அவ்வளவு நிச்சயமாகவே அவர்கள் அந்த நாளில் அப்பம் பிட்டார்கள் என்பதும் உண்மையே" என்று கூறிய J.W. மெக்கார்வி அவர்கள், அத்துடன் பின்வரும் கூற்றையும் கூடக் கொடுத்துள்ளார்:

> இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிறகு மிக நீண்ட காலம் வரையிலும் சபையின் உலகளாவிய நடைமுறை யானது [அப். 20:7ன் ஆதாரம்] கவனம் செலுத்தப்படும் போது, ... அது அப்போஸ்தல நடைமுறைப் பழக்கம் என்று வேதாகமக் கல்வியாளர்களிடையே உலகளாவிய ஒப்புதலை வெற்றியுடன் பெறுவதற்கு போதுமான தென்று நிரூபித்துள்ளது.

கர்த்தருடைய நாளில் கூடிவருவதை ஒருவர் மனப்பூர்வ மாய் விட்டுவிட்டால், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறு வதற்கும் அவர் மனப்பூர்வமாய் வராதிருக்கிறார் என்றாகும். மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கின்றவர்களைப் பற்றி எபிரெய எழுத்தாளர், "தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன்" (எபி. 10:29) என்று எழுதுவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. சபையின் ஆதி நாட்களில், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்வதற்குத் தேவனின் குடும்பமானது மகிழ்வுடன் கூடி வந்தது.

## குடும்பத்தார் தங்கள் பிதாவின் வசனத்தைப் படிப்பதில் பெரும் மகிழ்வு அடைந்தார்கள் (20:7)

சபையானது, "அப்பம் பிட்கும்படி கூடி வந்திருக்கையில்" தேவனுடைய வசனத்தைப் படிப்பது என்பது அவர்களுடைய ஆராதனையின் முக்கியமானதொரு அம்சமாய் இருந்தது. தேவனுடைய வசனமானது வாசிக்கப்பட்டது (கொலோ. 4:16; 1 தீமோ. 4:13); மற்றும் அங்கிருந்த மனிதர்களில் யாரேனும் புத்தி சொல்லும் திறமையுடன் இருந்தால், அவர்கள் பிரசங் கித்தார்கள் (1 தீமோ. 4:13; 2 தீமோ. 4:1, 2). துரோவாவில் இருந்த சபையானது அப்பம் பிட்கும்படி ஒன்றுகூடிய பொழுது, "பவுல் அவர்களுடனே சம்பாஷித்து" (அப். 20:7ஆ) என்று லூக்கா கூறினார். "சம்பாஷித்து" என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையிலிருந்து நாம் "dialogue" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். மெக்கார்டின் மொழிபெயர்ப்பில், "பவுல் அவர்களுடன் ஒரு கலந்துரை யாடல் நிகழ்த்தினார்" என்றுள்ளது. சற்றுப் பின்னதாக அவர் எபேசுவின் மூப்பர்களுக்குத் தந்த அறிவுரையைப் போலவே (வ. 17-35) அந்தச் செய்தியின் சுருக்கமும் அமைந்திருக்கலாம்.

பவுல், "நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" (வ.7இ) என்பதைக் குறிப்பிடுவதில் பிரசங்கியார்கள் மிகுந்த விருப்ப முள்ளவர்களாய் இருக்கின்றார்கள். இந்தக் கிறிஸ்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்குப் பவுலின் இருதயத்தில் ஏராளமான கருத்துக்கள் இருந்தன, ஆனால் சகோதரர்களும் கூட பவுல் பிரசங்கிக்கும்படி அநேகமாய் ஊக்குவித்திருப்பார்கள். பவுல், "இது போதும்; நேரம் ஆகிவிட்டது, நீங்கள் களைப்பாயிருப் பீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது, ஆனால் அவரது பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களோ, "இல்லை! நாங்கள் அவ்வளவு களைப்படையவில்லை, தொடர்ந்து பிரசங்கியுங்கள் சகோதரரே!" என்று கூறுவதையும் என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. துரோவாவில் இருந்த சகோதரர்கள் வாய்ப் பினால் வரன்முறைப்படுத்தப்பட்டதைக்காட்டிலும் அதிகமாக

கடிகாரத்தினால் வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. “அவர்களை வரச் செய்வதல்ல, வீட்டுக்குப் போகச் செய்வதே பிரச்சனையாய் இருந்தது!” என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.

மேற்கத்திய உலகத்தில் இருக்கும் நம்மில் பலர், தொலைக் காட்சியினால் கட்டுப்படுத்தப்பட்டு, வரையறைக்குட்பட்ட கவனிக்கும் கால அளவினைப் பெற்றவர்களாய் இருக்கின் றோம்; தொலைகாட்சி நிகழ்ச்சிகளின் பிரிவுகள் ஒரு சில விநாடிகளில் முடிவடைகின்றவைகளாய் இருக்கின்றன. வேதாகமம் போதிக்கப்படும் பொழுது, கவனித்து கற்றுக் கொள்வதற்கு நம்மையே நாம் ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்! ஆதி சபையார் தேவனுடைய வசனத்தைப் படிப்பதை மிகவும் நேசித்தார்கள்.

## குடும்பம் தன்னால் முடிந்த இடத்தில் கூடியது (20:8, 9)

பல வருடங்களாக நான் வீடுகளில், வாடகைக் கூடங்களில் மற்றும் பூங்காக்களில் குடும்ப மறு இணைப்பு நிகழ்ச்சிகளின் போது இருந்திருக்கின்றேன். ஒரு குடும்பம் எங்கு கூடி வருகின் றது என்பது முக்கியமான விஷயமல்ல. அது போலவே, ஆதிக் கிறிஸ்தவர்கள் ஒன்றாகக் கூடிவந்தபொழுது, அவர்கள் கூடி வந்த இடத்தைப் பற்றி அதிகமாய் அவர்கள் கவலைப்பட வில்லை. சில நேரங்களில் அவர்கள் வீடுகளில் கூடி வந்தார்கள் (பிலே. 1, 2); சில நேரங்களில் அவர்கள் பொது இடங்களில் கூடி வந்தார்கள் (அப். 2:46; 5:12). துரோவாவில், அவர்கள் மூன்றாம் மாடி மேல் வீட்டில் கூடி வந்தார்கள் (20:8, 9). தனியார் கட்டிடங்களில் ஒருசிலவற்றில் மட்டுமே மூன்று தளங்கள் இருந்ததால், இது ரோமாபுரியிலும், ரோமாபுரியினால் மேம்படுத்தப்பட்ட[12] நகரங்களிலும் இருந்ததைப் போன்ற ஒரு வசிப்பிடக் கட்டிடத்தில் இருந்த அறையாக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் ஏன் மூன்றாம் மாடியில் கூடி வந்தார்கள்? ஒருவேளை அவ்விடத்தின் வாடகை மிகவும் மலிவானதாக இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் தெருக்களின் ஆரவா ரங்களில் இருந்து விலகியிருப்பதைத் தேர்ந்து கொண்டிருக் கலாம். ஒருவேளை இது ஒன்று மட்டுமே அவர்களால்

பெறமுடிந்த இடமாயிருக்கலாம். காரணம் அல்லது காரணங்கள் எதுவாய் இருந்தாலும், அந்த இடமானது கூடி வருவதற்கு வசதியானதாய் இருந்ததில்லை. நாள் முழுவதிலும் வேலை செய்த பிறகு, ஆராதனைக்குச் செல்வதற்கு உறுப்பினர்கள் மூன்று தளங்களின் மாடிப்படிகளில் ஏறிச் செல்ல வேண்டியிருந்தது (அப். 20ல் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சியின்போது அவர்கள் மேலும் கீழுமாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பயணப்பட வேண்டியிருந்தது). இது அவர்களைக் கவலையுறச் செய்யவில்லை. அவர்கள் கூடிவந்ததின் நோக்கமானது அவர்கள் கூடும் இடத்தைக் காட்டிலும் முக்கியமானதாக இருந்தது.

ஒரு உள்ளூர் சபையானது கூடிவருவதற்குச் சொந்தமான இடம் ஒன்றைப் பெற்றிருப்பதில் நன்மை காணப்படக் கூடும்; வாரா வாரம் எங்கு கூடுவது என்பதை உறுப்பினர்கள் மிகச் சரியாக அறிந்திருப்பார்கள்; சபையின் நிலைத்த மாறுதல் உள்ள தேவைகளுக்கேற்றபடியாக கட்டிடமானது தகவமைக்கப்பட முடியும்; உறுப்பினரல்லாதவர்களுக்கு சபையானது அதிகம் நிலைப்புத் தன்மையுள்ளதாகவும், நிரந்தரமானதாகவும் தோன்றலாம். சொந்தமாக ஒரு கட்டிடத்தை வைத்திருப்பதில் குறைபாடுகளும் இருக்கக் கூடும்: அதன் விலைமதிப்பானது உறுப்பினர்களின் நிதி ஆதாரங்களை முழுமையாக வீணாக்கி, நல்ல பல ஊழியங்களை கைவிடச் செய்துவிடும்; சபையானது கட்டிட இலக்குள்ளதாகி, இழந்து போகப்பட்டவர்கள் “ஆராதனைகளுக்கு” வருவதற்காகக் காத்துக் கொண்டிருக்கக் கூடும். ஒரு கட்டிடமானது ஒரு உள்ளூர் சபையை, சுய மையமுடையதாகவும், அதன் சொந்த நலனிலேயே அடிப்படையான ஆர்வமுள்ளதாகவும் ஆக்கி விடலாம்.

நீங்கள் இணைந்துள்ள உள்ளூர் சபையானது அதன் சொந்தக் கட்டிடத்தைப் பெற்றிருந்தாலும், இல்லாவிட்டாலும்,[13] எங்கு கூடுகின்றோம் என்பது முக்கியமானதல்ல. ஒன்று கூடுகையில் நாம் என்ன செய்கின்றோம் என்பதும் - மற்றும் கூடுதல் முடிந்து செல்லும்போது எப்படி வாழுகின்றோம் என்பதும்தான் முக்கியமானது என்று உறுப்பினர்களுக்கு சீராக நினைவூட்டிக் கொண்டேயிருக்க வேண்டும்.

## குடும்ப உறுப்பினர்கள் மற்ற ஒவ்வொருவரைப் பற்றியும் அக்கறையாய் இருந்தார்கள் *(20:9-12)*

*துரோவாவில் இருந்த பலமாடிக் குடியிருப்புக் கட்டிட அறையில், "அப்பொழுது ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன்.... பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கையில் மிகுந்த தூக்கமடைந்து.. நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து" (வ. 9). உறுப்பினர்கள் திடீரென எழுந்தோடி, நீண்ட மாடிப்படிகளில் முண்டியடித்துக் கொண்டு விரைந்து சென்றதால் ஆராதனையானது திடீரென்று தடைப்பட்டது. இளம் மகன் அல்லது மகளை இழந்தவர்கள், இந்தப் பையனின் முறிந்து போன சரீரத்தைச் சுற்றிலும் நின்று பார்த்தவர்களின் கவலையைச் சற்று அறியக் கூடும். லூக்கா எளிமையாக, அவர்கள் "கலக்கமடைந்தார்கள்" (வ. 10) என்று பதிவு செய்தார்.*

*வசனம் 12ல், அவர்களது வருத்தத்திற்குக் கூடுதல் பரிமாணம் ஒன்று யோசனையாகத் தரப்படுகின்றது. பிறகு, கூட்டம் தடைப்பட்டபோது, "அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக் கொண்டு வந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்." அந்தப் பையனுக்கு-அவனது போக்குவரத்து மற்றும் அவனது பாதுகாப்பு ஆகியவற்றிற்கு-அவர்களே பொறுப்பாயிருந்தார்கள் என்பது உறுதி. NIVயில், "அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாக வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்" என்றுள்ளது. (அடிக்கோடிட்டது என்னால் வலியுறுத்தப்படுகின்றது.) அந்த இளைஞனின் பெற்றோர், கிறிஸ்தவரல்லாதவர்களாய் இருந்திருக்கக் கூடும், மற்றும் அவனைப் பாதுகாப்புடன் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதாக உறுப்பினர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கக் கூடும். சிதைந்துபோன அவனது உடலைப் பார்த்து, அவனது பெற்றோர்களுக்கு என்ன பதில் கூறுவது என்று திகைத்து நின்ற அக்கூட்டத்தில் சற்று நேரம் உங்களை நிறுத்திப் பாருங்கள். அந்த பையனைப் பவுல் உயிருள்ளவனாக்கிய போது, அவர்களின் இருதயத்தில்*

*சந்தோஷம் எவ்வளவாய் நிரம்பியிருக்க வேண்டும்! "மிகுந்த ஆறுதலடைந்தார்கள்'' என்பது லூக்காவினால் தரப்பட்ட முன்மாதிரியான அடக்கக் கூற்றாகும்.*

*நமது அடுத்தப் பாடத்தில், நாம் அந்த அற்புதத்தைப் பற்றி இன்னும் விபரமாகப் படிப்போம். இந்தக் கணத்தில் நான், குடும்ப உறுப்பினர்கள் (குடும்பத்தில் இருந்த) மற்ற ஒவ்வொருவரைப் பற்றியும் அக்கறையாய் இருந்தார்கள் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். உண்மையில் அவர்கள், ''சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப் படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்" (ரோமர் 12:15) என்ற வசனத்தின்படி நடந்தார்கள். கிறிஸ்துவுக்குள் உள்ள சகோதர சகோதரிகளுடன் உங்கள் இருதயமானது ஒலி நயத்துடன் துடிக்கவில்லையென்றால், அவர்களின் தகப்ப னையே நீங்களும் தகப்பனாய்க் கொண்டிருக்கின்றீர்களா இல்லையா என்பதை நிச்சயப்படுத்த பரிசோதனை மேற் கொள்ள நீங்கள் விரும்பலாம்.*

## குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மற்றவருடன் உணவுண்ணுவதையும், சென்று பார்ப்பதையும் மகிழ்ச்சியுடன் அனுபவித்தார்கள் (20:11)

*ஐத்திகு உயிர்ப்பிக்கப்பட்ட பிறகு, பவுலும் மற்றவர்களும் மூன்றாம் தளத்தில் இருந்த அறைக்கு மறுபடியும் திரும்பி னார்கள். வசனம் 11ல், "பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப் புசித்து, விடியற்காலமளவும் வெகு நேரம் பேசிக் கொண் டிருந்து, ....." என்று கூறப்படுகின்றது. இந்த அப்பம் பிட்டுப் புசித்தல் என்பது வசனம் 7ல் குறிப்பிடப்பட்ட அதே அப்பம் புசித்தல் நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதாய் இருக்கச் சாத்தியம் உண்டு, ஆனால் இது உண்மையாயிருக்க முடியாததாகும். துரோவாவில் இருந்த கிறிஸ்தவர்கள் "அப்பம் பிட்கும்படி" கூடிவந்ததால், ''பவுல் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்த வரையிலும்" அவர்கள் புளிப்பில்லாத அப்பம் மற்றும் திராட்ச*

*ரசம் ஆகியவற்றில் பங்கு பெறுவதற்கு மணிக்கணக்கில் காத்திருந்தார்கள் என்பது பொருத்தமற்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய தியாகத்தை நினைவுகூருவதற்காக அவர்கள் அவரது பந்தியை ஆசரித்தது என்பது நிச்சயமாகவே அவர்கள் செய்த முதல் விஷயங்களில் ஒன்றாக இருந்திருக்கும். அதன் பிறகு அவர்கள் பவுல் பேசுவதைக் கவனிக்கத் தயாராகி யிருப்பார்கள். வசனம் 11ல் உள்ள அப்பம் பிட்டுப் புசித்தல் என்பது சில மணி நேரங்கள் தாமதமாக நடைபெற்றது, இது ஒரு ஐக்கிய விருந்தைக் குறிப்பதாயிருக்கும். இவ்விடத்தில் உள்ள வசனப் பகுதியானது அப். 2ல் உள்ள வசனப்பகுதியைப் போன்றதாகும், அதில் வசனம் 42ல், அப்பம் பிட்குதல் என்பது கர்த்தருடைய பந்தியையும், சில வசனங்களுக்குப் பிறகு (வ. 46) அதே சொற்றொடர் ஒரு பொதுவான உணவையும் குறிப்பிடு கின்றது (அப். 2:42, 46க்கான குறிப்புகளைக் காணவும்).*

*நடபடிகளைப் பற்றிய நமது பாடங்களில் நாம் பார்த்திருக் கிறபடி, உணவு உண்ணுவதில் ஐக்கியம் என்பது ஆதிக் கிறிஸ்த வர்களின் வாழ்வில் ஒரு முக்கியமான பகுதியாய் இருந்தது. பவுலும் மற்றவர்களும் மேலறைக்கு, மகிழ்ச்சி கொண்டவர் களாய் மறுபடியும் திரும்பியதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. நெருங்கவிருந்த துன்பத்தைப் பற்றிப் பேசுகையில் அவர்கள் குரல்களில் இருந்த நிம்மதியை நான் கேட்டுணர முடிகின்றது. ஐத்திகு தூங்கி விழுந்ததைக் குறித்து யாரேனும் கேலி செய்யாதிருந்தால் நான் ஆச்சரியமடைவேன். பொட்ட லங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொருவரும் கொண்டு வந்த உணவு ஒன்றாகப் பரப்பி வைக்கப்பட்டது. உணவுக்காகவும், பவுலின் வருகைக்காகவும், ஐத்திகு காக்கப்பட்டதற்காகவும் நன்றி செலுத்திய பிறகு அவர்கள் ஒன்றுகூடி அமர்ந்து உண்டார்கள். யூதர்கள் மற்றும் புறஜாதியார், எஜமானர்கள் மற்றும் அடிமைகள், ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்-"கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய்" இருந்ததால்-பொதுவான உணவு மேஜையைச் சுற்றி அமர்ந்து உண்டது இந்த உலகத்திற்குத் திகைப்பை ஏற்படுத்தியிருக்கும் (கலா. 3:28).*

*அவர்கள் ஒன்றுகூடியிருந்த அந்த வேளையில் பவுல், "வெகு நேரம் பேசிக் கொண்டிருந்"தார் (வ. 11). "பேசிக் கொண்டி ருந்து" என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க*

வார்த்தையானது வசனம் 7ல் "சம்பாஷித்து" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையிலிருந்து மாறு பட்டதாய் இருக்கின்றது. இவ்வார்த்தையானது சாவகாசமான உரையாடலுக்குப் பயன்படுத்தக்கூடிய ஒன்றாகும். வசனம் 11ன் பிற்பகுதியில் F.F. புரூஸ் அவர்கள், "விடியற் காலமளவும் இன்னும் அதிகமாய் பேசிக் கொண்டிருந்து'' என்று மொழிபெயர்த்தார். உலகத்தின் எனது பகுதியில் நாங்கள் இதை, "பவுல் அவர்களை விட்டுச் செல்லுமுன்பு ஒரு நல்ல பார்வையிடுதலை மகிழ்ச்சியுடன் அநுபவித்தார்''[14] என்று கூறுவதுண்டு.

துரோவாவில் இந்த நாளின் முடிவானது, ஐக்கிய உணவைப் பின் தொடர்ச்சியாகக் கொண்டிருந்த பல ஆராதனைகளை (நான் கலந்து கொண்டவைகள்) எனக்கு நினைவூட்டுகின்றது. இப்படிப்பட்ட உணவொன்றைப் புதிய ஏற்பாடானது "அன்பின் விருந்து" (யூதா 12)[15] என்று அழைக்கின்றது. நாம் இதைப் பெரும்பாலும், வீட்டுப் பாங்கானது என்று அழைக்கின் றோம்: "முழுச் சபையாரின் ஐக்கியம்", "a potluck meal" அல்லது "dinner on the grounds." (எனது நண்பர் ஒருவர் இதை "an eatin' meetin" என்று அழைக்கின்றார்.) இது எப்படி அழைக்கப்பட்டா லும், இது நாம் ஒருவரை ஒருவர் இன்னும் நன்றாக அறிந்து கொள்ளக் கூடிய சிறப்பான நேரமாகும், நமக்குள் உள்ள உறவுக் கட்டுகள் பலப்படும் நேரம் ஆகும்.

குடும்பங்கள் சாதாரணமாக, ஒன்று கூடுதல், ஒன்றாக உண்ணுதல், ஒருவரை ஒருவர் சந்தித்தல் போன்ற விஷயங் களை மகிழ்வுடன் அநுபவிக்கின்றன. அது போலவே, ஆதி சபையின் உறுப்பினர்கள் ஒருவ்வொருவரும் மற்றவருடன் உணவு உண்ணுதல் மற்றும் ஒவ்வொருவம் மற்றவருடன் உரையாடுதல் ஆகியவற்றை மகிழ்வுடன் அநுபவித்தார்கள். நாமும் அப்படியிருக்க வேண்டும்.

## முடிவுரை

நமது பாடத்தை நாம் முடிக்கையில், ஆதி சபையின் குடும்பச் சூழலை நறுமணமூட்டுவதற்குச் சற்று நேரம் தாமதிப்போம். புதிய ஏற்பாட்டு சபையின் அடிப்படைக்

கூறுகளான நிறுவன அமைப்பு, ஆராதனை வெளிப்பாடுகள், பெயர்கள் போன்றவற்றை நாம் மறுபடியும் சீரமைத்தோம் என்று நான் நம்புகின்றேன். ஆதிக் கிறிஸ்தவர்களின் அடிப் படை எண்ணப்போக்கை புதுப்பிப்பதில் போதிய அளவு கடினமாக நாம் உழைக்கின்றோமா என்று சில வேளைகளில் நான் வியப்படைவதுண்டு. சபையானது தேவனுடைய குடும்பம் (1 தீமோ. 3:15) என்று பவுல் வலியுறுத்தினார். அது போலவே செயல்படும்படி தேவனே எங்களுக்கு உதவும்!

## பிரசங்கக் குறிப்புகள்

*The Bible Exposition Commentary,* Vol. 1, என்ற புத்தகத்தில், வார்ரென் W. வயர்ஸ்ப் அவர்கள் அப். 20:6-12 பகுதிக்கு "பிரிவு உபசார ஆராதனை" என்று தலைப்பிட்டு, பின்வரும் கருத்துக் களின்படி வசனப்பகுதியைப் பிரித்தார்: (1) கர்த்தருடைய நாள், (2) கர்த்தருடைய மக்கள் (3) கர்த்தருடைய பந்தி (4) கர்த்தருடைய செய்தி மற்றும் (5) கர்த்தருடைய வல்லமை.

---

குறிப்புகள்

[1]இந்த பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் ''சபை'' என்ற வார்த்தையானது "ஆராதிப்பதற்குக் கூடுதல்" என்ற அர்த்தம் தரும்படி பல இடங்களில் இவ்விடத்தில் உள்ளது போலவே பயன்படுத்தப்பட்டுள்ளது. [2]இந்தப்பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் எனது அணுகுமுறை யானது, கிறிஸ்தவ வேதாகமப் போதகர் என்ற பத்திரிக்கையில் (செப்டம்பர் 1982 இதழில்) வெளியான "தூங்கும் சீஷன் ஐத்திகு" என்ற ஜான் வேடி அவர்களின் கட்டுரையின் அடிப்படையிலும், டெக்ஸாஸின் அபிலைனில் உள்ள தென்மலைகள் கிறிஸ்துவின் சபையில் டிசம்பர் 14, 1986ல் ரிக் ஆட்ச்லீ அவர்கள் பிரசங்கித்த "அப்பம் பிட்குதலும், அமரரானவரை எழுப்புதலும்" என்ற பிரசங்கத்தின் அடிப்படையிலும் அமைந்துள்ளது. அவ்விரு பாடங்களிலும் இருந்து சில கலைச் சொற்களும், பல விளக்கங்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. [3]பவுல், லூக்கா மற்றும் உடன் இருந்த மற்றவர்கள் எவரும், வாரத்தின் முதல் நாளில் கப்பலின் தளத்திலேயே ஆதாரனைக்குக் கூடியிருக்கலாம். [4]இருந்தாலும், பவுலும் மற்றவர்களும் அங்கு சும்மா உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தார்கள் என்று நாம் யூகித்து விடக் கூடாது. பவுலின் குழுவில் குறைந்தது ஒன்பது பேர் இருந்தார்கள், (அனைவரும் இல்லையென்றாலும்) அவர்களில் பலர் பிரசங்கிக்கும் திறன் உள்ளவர்களாய் இருந்தார்கள். ஒன்பதுக்கும் அதிகமான மனிதர்களின் ஒரு வாரப் பிரசங்க

*முகாமானது அதிக கனிகளைக் கொடுத்திருக்க வேண்டும்.* [5]*சபை நிலைநாட்டப்பட்டதும் வாரத்தின் முதல் நாளில்தான் (லேவி. 23:16; அப். 2:1).* [6]First Apology 67:7, quoted by Jimmy Allen in *Survey of First Corinthians* (Searcy, Ark.: By the Author, 1989), 141. Justin Martyr, *இவர் கி.பி. 100ம் ஆண்டளவில் பிறந்தார், இவர் ஆதி கிறிஸ்தவ எழுத்தாளர்களில் ஒருவர் என்று அங்கிகரிக்கப்படுகின்றார். இவர் யோவானின் சீஷராயிருந்த போலிகார்ப் அவர்களின் சீஷராய் இருந்தார். இவரது எழுத்துக்களில் உள்ள கூற்றுக்கள் மற்ற பழைய பதிவேடுகளினாலும் ஆதரிக்கப்படுகின்றது, இப்பதிவேடுகளில் உள்ள பர்னபா 15:9 போன்றவைகள் இவைகளில் அடங்கும். ஒரு புதிய நம்பிக்கைக்குள் பிரவேசித்து, ஓய்வு நாளை இனி ஆசரிக்காமல், கர்த்தருடைய நாளுக்காக வாழ்ந்தவர்கள் பற்றி இக்னேஷியஸ் பேசினார்* (Letter to the Magnesians 9:1-3). "The Constitution of the Holy Apostles," *என்பதில் இருந்து* Robert K. Oglesby *மேற்கோள் காட்டியுள்ளார். இந்த மேற்கோளானது* *A Group Discussion Study of Acts* (Richardson, Tex.: RKO Publications, 1971), 93 *என்ற நூலில் உள்ளது.* [7]*சில அடிமைகளும் இருந்தார்கள் (1 கொரி. 12:13; எபே. 6:5; கொலோ. 3:22; 1 தீமோ. 6:1).* [8]*"இவ்வசனப் பகுதியானது, வெள்ளிக் கிழமை சூரியன் மறையும் பொழுதில் இருந்து சனிக்கிழமை சூரியன் மறையும் பொழுது வரையுள்ள நாள் ஓய்வுநாளென்றும், இதுவே கிறிஸ்தவ ஆராதனைக்குத் தகுதியான நாள் என்றும் எண்ணுகின்ற ஏழாம் நாள் கூட்டத்தாரின் நடைமுறையை ஆதரிப்பதில்லை. இந்த ஆராதனையானது சனிக்கிழமை இரவில் நடந்திருந்தாலும் கூட, இது யூதர்களின் ஓய்வு நாளில் ஒரு பகுதியாகக் கருதப்படவில்லை"* (I. Howard Marshall, *The Acts of the Apostles,* The Tyndale New Testament Commentaries, gen.ed. R.V.G. Tasker [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1980], 326). [9]*அவர்கள் பவுலின் பிரசங்கத்தைக் கேட்பதற்கல்ல, அப்பம் பிடுவதற்காகவே கூடி வந்திருந்தார்கள் என்பதைக் கவனியுங்கள். "பவுலைப் போன்ற தனிச் சிறப்பு வாய்ந்த அப்போஸ்தலரின் பிரசங்கவுரை கூட அந்த நிகழ்ச்சியின் போது இரண்டாம் பட்சமாகவே கருதப்பட்டது"* (James Burton Coffman, *Commentary on Acts* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1976], 386). [10]Foster, *1685 அப். 20:7ல் "அப்பம் பிட்கும் படி" என்ற சொற்றொடரானது கர்த்தருடைய பந்தியை* agape *(யூதா 12ன் "அன்பின் விருந்து"; அதாவது, ஐக்கியத்தின் வெளிப்பாடாக உள்ள ஒரு பொது உணவு) என்பதுடன் கலந்து குறிப்பிடுவதாகச் சிலர் நம்புகின்றார்கள் - இது அநேகமாய் கொரிந்துவில் நடந்த நிகழ்ச்சியைப் போன்றதாகும் (1 கொரி. 11:17-22, 33, 34). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அப். 20:7ல் உள்ள "அப்பம் பிட்கும்படி" என்ற சொற்றொடர் கர்த்தரின் பந்தியைக் குறைந்தபட்சம் உள்ளடக்குவதாகவாவது அவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். இருப்பினும், துரோவாவில் இருந்த சபையார் இந்த இரண்டு "உணவுகளையும்" இணைத்திருந்தார்கள் என்பதற்கான சுட்டிக் காட்டுதல் எதுவும் இல்லை. அவர்கள் அப்படிச் செய்திருந்தால், சந்தேகமின்றிப் பவுல் தாம் கொரிந்து நகரச் சபையாருக்குச் செய்தது போலவே அந்த நடைமுறையை ஊக்கம் குறையச் செய்திருப்பார் (1 கொரி. 11:17-22, 33, 34).*

[11]*ஆதி கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியை வேறு எந்த நாளிலும்*

ஆசரிக்காமல், வாரத்தின் முதல் நாளில் மட்டும் ஆசரித்தார்கள். [12]தூரோவா என்பது ரோமரின் குடியேற்ற நகரமாய் இருந்தது. [13]இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டு வரையிலும் கூட "சபைக் கட்டிடங்கள்" பற்றிய பதிவேடுகள் எதுவும் நாம் பெற்றிருக்கவில்லையென்பதால், அப்படிப்பட்ட வைகளைப் பெற்றிருப்பது வசன ரீதியானதல்ல என்று சிலர் கூறலாம். நாம் வீடுகளில்தான் கூடி வரவேண்டும் என்று இவர்கள் அடிக்கடி கூறுகின்றார் கள். ஆயினும் நடபடிகளைப் பற்றிய நமது பாடங்கள், ஆதி சபையார் பல வகைப்பட்ட இடங்களில் கூடி வந்ததை நமக்குக் காண்பித்திருக்கின்றன; வீடுகளில்தான் கூடி வர வேண்டும் என்பதற்கான "தனிப்பட்ட முன்மாதிரி" எதுவும் இல்லை. கூடிவரும்படியான (எபி. 10:25 போன்ற) கட்டளைகள் ஒரு இடத்தில் கூடி வர வேண்டும் என்பதை அங்கிகரிக்கின்றன, ஆனால் இடம் எது என்பதைக் குறிப்பிடுவதில்லை. அந்த இடம் என்பது ஒரு வீடாகவோ, வாடகைக் கூடமாகவோ, ஒரு வேப்ப மரத்தடியாகவோ அல்லது உள்ளூர் சபையார் வாங்கிய அல்லது கட்டிய கட்டிடமாகவோ இருக்கக் கூடும். தேவனால் தரப்பட்ட அறைகூவல்களை நிறைவேற்று வதைச் சந்திக்கக் கூடிய சிறந்த இடம் எது என்பதை அந்தந்த உள்ளூர் சபைகளே தீர்மானிக்க வேண்டும். [14]"நட்புறவாய்ப் பேசுதல்" என்று அர்த்தப் படும் உள்ளூர்ச் சொற்றொடர் ஏதாவது இவ்விடத்தில் பதிலிடப்படலாம். [15]இந்த விருந்துடன் கர்த்தருடைய பந்தியை இணைத்ததனால் கொரிந்துவில் இருந்த சபையார் யாவரும் ஒரு குடிகாரக் கூட்டமாகி அன்பின் விருந்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள் (1 கொரிந்தியர் 11). அவர்கள் ஐக்கிய விருந்து உண்டதையல்ல, அதைத் தவறாகப் பயன்படுத்தியதையே பவுல் கண்டனம் செய்தார்.